# இலங்கைச் செய்திகள்

இலங்கை உயர்ஸ்தானிகராலயம்-சிங்கப்பூர்

மார்ச் 2003 மலர் 3 இதழ் 3


## ஜப்பானில் நடந்து முடிந்த 6-ம் சுற்று அமைதி பேச்சுவார்த்தை

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான 6-ம் சுற்றுப் பேச்சுவார்த்தை ஜப்பான் - ஹகோன் நகரில் கடந்த மாதம் 18ம் தேதி முதல் 21ம் தேதி வரை நடைபெற்றது.



*இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தையில் சர்வதேச சமூகம் பெருமளவில் ஈடுபாடு கொண்டுள்ளது. ஜப்பானில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்கு முன்னோடியாக ஜப்பான் மற்றும் நார்வே பிரதிநிதிகளுடன் அரச விடுதலைப் புலிகளின் பேச்சாளர்கள்.*

இப்பேச்சுவார்த்தைகளின் போது பாதுகாப்பு, பொருளாதாரம், அரசியல் விடயங்களில் தொடர்ச்சியாக இருதரப்பினரும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டது.

கடல் பிராந்தியத்தில் பாதுகாப்பு நிலையை வலுப்படுத்துவது பற்றியும், யுத்த நிறுத்த கண்காணிப்பாளர்களின் பொறுப்பு, கடமை ஆகியனவற்றை மேலும் வலுப்படுத்துவது பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. உள்சுயநிர்ணய அடிப்படையில் ஒரு ஆட்சியின் கீழ், ஒற்றுமைப்பட்ட இலங்கைக்குள், சமஷ்டி முறை மூலம் தீர்வினை காண்பதற்கும் மீள வலியுறுத்தப்பட்டது.
*(2-ம் பக்கம் தொடரும்)*

## ஈராக் தொடர்பான இலங்கையின் நிலைப்பாடு

அழிவு ஆயுதங்களை இல்லாமலாக்கும் விடயத்தில் அனைத்துலக நிறுவன பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கை பல்வேறு சந்தர்ப்பங்களில் ஈராக்கினை வலியுறுத்தியுள்ளது. ஈராக் அத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளாததன் காரணமாக சுமுகமான ரீதியில் ஆயுத களைதல் நடைபெற இயலாமலாயிற்று. அனைத்துலக நிறுவனத்தின் பாதுகாப்புச் சபையில் கருத்து ஒருமைப்பாடு நிலவாமை இத்தகைய முயற்சியை மேலும் நிர்மூலமாக்கியது. மத்திய கிழக்கில் உருவாகியிருக்கின்ற இந்நெருக்கடி நிலையை இலங்கை கவலையுடன் நோக்குகிறது. இந்த நெருக்கடி காரணமாக ஏற்பட்டிருக்கின்ற அரசியல், பொருளாதார, சமூக மற்றும் மனிதாபிமான பின் விளைவுகள் ஈராக், மத்திய கிழக்கு மற்றும் உலக நாடுகளை வெகுவாக பாதிக்கும் என இலங்கை கருதுகிறது. (2-ம் பக்கம் தொடரும்)

## இலங்கை - இந்திய கலாச்சார பாலத்தை மேலும் உறுதியாக்கிய புத்தக அன்பளிப்பு

“சிங்களத்தீவினிற்கோர் பாலமைப்போம்” எனக் கூறிய பாரதியாரின் அன்றைய கூற்றினை மெய்ப்பிக்கும் வகையில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பாலம் அமைக்கப் போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போது கூறுகிறார். அத்தகைய பாலத்துக்கு முன்னோடியாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கலாசாரப் பாலத்தை மேலும் உறுதியாக்கிட புரைமைக்கப்பட்ட யாழ் நூலகத்திற்கு புத்தக அன்பளிப்பு செய்கிறோம் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென் தெரிவித்தார்.

யாழ் நூலகத்துக்கான புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கும் வைபவம் அளுண்மையில் இந்திய கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.
(4-ம் பக்கம் தொடரும்)

## வடகிழக்கு அபிவிருத்திக்கு ஆசியவங்கி மேலும் நிதி

வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட வடகிழக்கு மாகாண அபிவிருத்தி புனரமைப்பு பணிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 370 கோடி ரூபாயை (சிங்கப்பூர் வெள்ளி 72மி.) வழங்கியுள்ளது. இந்நிதி வடகிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களுக்கும் செலவிடப்படுமென வடகிழக்கு சமூக மீளமைப்பு அபிவிருத்திட்ட அலுவலகம் வெளியிட்டிருக்கும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுடன் அரசாங்கம் மேற்கொள்ளும் வடகிழக்கு மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு பணிகளுக்கு உறுதுணையாக இருப்பதற்காகவும் இந்நிதி வழங்கப்பட்டுள்ளது.

கல்வி, சுகாதாரம், குடிநீர்வழங்கல், வீடமைப்பு, விவசாயம், நீர்ப்பாசனம், மீன்பிடி, வருமானம் ஈட்டல், பாதை அமைத்தல், மீள்குடியேற்றம் ஆகியவற்றிற்கு இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கப்பட உள்ளது.

இதுவரைக்கும் வடகிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் 329 திட்டங்கள் இனங்காணப்பட்டு 153 கோடி ரூபாவுக்கான (சிங்கப்பூர் வெள்ளி 30மி.) வேலைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 1-ம் பக்கத் தொடர்ச்சி … இலங்கையின் ஈராக்…

அனைத்துலக நிறுவனம் பதட்டங்களை தணிக்கும் முயற்சியில் முக்கியமான பங்கினை வகிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்திய இலங்கை, மத்திய கிழக்கில் சமாதானம் நிலவுவதற்கும் இந்நிறுவனத்தின் பங்கு இன்றியமையாதது எனவும் தெரிவித்துள்ளது.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பயங்கரவாத செயல்கள் உருவெடுக்க அனுமதியளிக்கக்கூடாது என வலியுறுத்திய இலங்கை, அனைத்துலக நிறுவனம் சர்வதேச பிரச்சனைகளைத் தீர்க்கும் தளமாக அமைய வேண்டும் எனவும் அத்தகைய சிந்தனை கொண்ட நாடுகளுடன் இலங்கை அணுக்கமாக கருத்து பரிமாற ஆயத்தமாக உள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

## ஜப்பான் உதவிவழங்கும் மாநாட்டுக்கு முன்னோடியாக அடுத்த மாதம் அமெரிக்காவில் ஆயத்த மாநாடு

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளித்து வருகின்றது. இதன் இன்னொரு வெளிப்பாடாக ஜப்பானில் ஜூன் மாதம் நடைபெற இருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கு முன்னோடியாக, அமெரிக்காவின் துணை இராஜாங்க செயலாளர் திரு.ஆமிரேஜின் தலைமையில் அடுத்த மாதம் 14ம் தேதி ஒருநாள் ஆயத்த மாநாடு வாஷிங்டனில் நடைபெறவுள்ளது. ஜப்பான் உதவி வழங்கும் மாநாட்டை வெற்றிபெற செய்ய வேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியுடன் உள்ளமையே இம்முன்னோடி மாநாட்டிற்கு காரணமாகும்.

இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 30 நாடுகளில் நிதியமைச்சர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இவ்வழைப்புக் கடிதங்கள் இலங்கையின் பொருளியியல் சீரமைப்பு அமைச்சர் திரு.மிலிந்த மொறகொடவினால் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## 1-ம் பக்கத் தொடர்ச்சி…. ஜப்பானில் ..

இலங்கை அரசாங்கம் முன்வைத்த உள்ளுராட்சி தேர்தல்களை வடகிழக்கு பிராந்தியத்தில் நடத்துவதற்கான முன் மொழிவினை விடுதலைப் புலிகள் சாதகமாக ஆராய்வதாகத் தெரிவித்தனர்.

அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை : ஏப்ரல் 21 – மே 2 தாய்லாந்நதிலும், 8-ம் சுற்று பேச்சுவார்த்தை - ஜூன் 12 - ஜூன் 15 ஜப்பானிலும், 9-ம் சுற்று பேச்சுவார்த்தை - ஜூலை 15 - ஜூலை 18 ஐரோப்பிய நாடொன்றிலும் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் 6ம் சுற்றுப் பேச்சு முடிவில் வெளியிட்ட அறிக்கையொன்றில் அமெரிக்க அரசாங்கம் இப்பேச்சின் முன்னேற்றம் குறித்து திருப்தி தெரிவித்துள்ளது. இவ்வறிக்கையில், விடுதலைப் புலிகள் மேற்கொள்வதாகக் கூறப்படும் இலங்கைக்குள் ஆயுதம் கடத்தும் சம்பவங்கள் போன்றவை நடைபெறாதிருப்பதற்கு பேச்சுவார்த்தை காத்திரமாக பங்களிப்பை அளிக்கும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீன கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு இலங்கை அரசு கண்டனம்

இலங்கை அரசாங்கம், மார்ச் 20ம் தேதி சீன மீன்பிடி கப்பல் ஒன்றின் மீது முல்லைத்தீவு கடற்கரையில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது. இத்தாக்குதலில் மாண்ட ஏழு சீன தேசத்தினருக்கு இலங்கை தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்தது. மீன்பிடி திணைக்களத்தின் அனுமதியுடன், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட இக்கப்பல் இலங்கை முதலீட்டுக் கழகத்தினால் அங்கிகரிக்கப்பட்ட செயல் திட்டத்தின் அடிப்படையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தது.

## ஞாயிற்றுக் கிழமைகளிலும் திறக்கப்பட்டிருக்கும் ஏ-9 பாதை

யாழ்ப்பாணத்தையும் தென் பிரதேசத்தையும் இணைக்கும் ஏ-9 பாதை ஞாயிற்றுக் கிழமைகளிலும் பொது மக்களுக்காக திறக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கையொன்றில் ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணி முதல் மாலை 5.30 மணி வரை இப்பாதை பொது மக்களுக்காக திறந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் இந்த பாதையினை திறக்க முடிவு செய்யப்பட்டது தெரிந்ததே.

## பேச்சுவார்த்தை மூலம் தீர்வு - கருத்து கணிப்பில் தெரிவிப்பு

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பு ஒன்றில் 83%-மான இலங்கையர் பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத்தை அடைய முடியும் என தெரிவித்துள்ளனர். 54% மக்கள் இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து திருப்தி தெரிவித்துள்ளனர். இக்கருத்து கணக்கெடுப்பு ஜனவரி 31ம் தேதி முதல் பிப்ரவரி 14ம் தேதி வரை 17 மாவட்டங்களில் உள்ள 1397 மக்களின் கருத்துகளைக் கொண்டு நடத்தப்பட்டது.

## யாழ். மகளிர் தின விழாவில் தென்னிலங்கை பெண்கள்

யாழ்ப்பாண இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின விழாவில் தென்னிலங்கையை சேர்ந்த சுமார் 250 பெண்கள் கலந்துகொண்டனர்.

மகளிர் அபிவிருத்தி நிலையம், சமூக செயற்பாட்டுக் குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியன இணைந்து இம்மாநாட்டை நடத்தியது.

யாழ் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி. சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ் குடாநாட்டைச் சேர்ந்த பெண்களும், தென்னிலங்கையைச் சேர்ந்த பெண்களும் கலந்து கொண்டு பெண்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்தனர்.

## தாய்நாட்டில் கடமையாற்ற இலங்கை வைத்தியர்களுக்கு அழைப்பு

வெளிநாடுகளில் வாழும் இலங்கை வைத்தியர்களை தனது சொந்த நாட்டில் கடமை புரிய வருமாறு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

தற்போது அமுலிலுள்ள யுத்த நிறுத்தம் காரணமாக ஏற்பட்டுள்ள அமைதியினைத் தொடர்ந்து, இலங்கை அரசு வடகிழக்கு பகுதிகளில் இயல்பு நிலையினை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. சுகாதாரத் துறையில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முக்கியமான பிரச்சனை நிபுணத்துவ மருத்துவர்களுக்கான தட்டுப்பாடாகும்.

இத்திட்டத்தின் கீழ் இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளில் கடமையாற்ற விரும்பும் வைத்தியர்களுக்கு இலங்கை அரசு கொழும்பிலிருந்து வேலையமர்ந்துள்ள இடத்திற்கு விமானப் போக்குவரத்து, தங்குமிடம், பேசித் தீர்மானிக்கும் சம்பளம் எனபனவற்றை வழங்கும்.

தாய்நாட்டிற்கு கடமை புரிய விரும்பும் வைத்தியர்கள், இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

## பலூன் களியாட்டத்தில் கலந்து கொண்ட உல்லாச பயணிகள்

தற்போது அமுலிலுள்ள சமாதான சூழல் நிலையினால் ஈர்க்கப்பட்டு இலங்கைக்கு பயணம் செய்யும் உல்லாச பயணிகளின் தொகை அதிகரித்து வருகிறது. மேலும் உல்லாச பயணிகளை கவரும் ஒரு நிகழ்ச்சியாக இலங்கை பலூன் களியாட்டம் கடந்த மார்ச் 22ம் தேதி இலங்கையின் முதல் தலைநகரமான அனுராதபுர மாவட்டத்தில் தொடங்கியது. இவ்வுல்லாச பயண பலூன் பொலனுருவ, சிகிரியா, கண்டி, நுவரலியா உள்ளிட்ட பல்வேறு நகரங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளது. இப்பலூனில் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, சுவிச்சர்லாண்ட், அமெரிக்கா உள்ளிட்ட 46 நாடுகளிலிருந்து வந்த உல்லாச பயணிகள் பயணம் செய்யவுள்ளனர்.




பல்லாயிரக்கணக்கான மக்கள் இக்கண்கவரும் காட்சியினை கண்டு களித்தனர். படத்தில் காணப்படுவது இவ்விஜயத்துக்கு பயன்பட்ட பலூன்.

## 2-பக்கத் தொடர்ச்சி...... இலங்கை இந்தியா ...

அப்போது சுமார் 2000 தமிழ், ஆங்கில நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இங்கு உரையாற்றும் போதே இந்திய தூதுவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசுக்கும் புலிகள் இயக்கத்துக்குமிடையிலான சமாதான பேச்சுவார்த்தை தொடர்ந்து முன்னெடுக்கப்படுவது வரவேற்கத்தக்கது எனவும் அவர் மேலும் கூறினார்.

மேலும் பேசிய இந்தியத் தூதுவர், ஜப்பானில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தொனித்த ஜனநாயகம், மனித உரிமைகளை கடைப்பிடிப்பதற்கான கடப்பாடு என்பன முற்றாக கடைபிடிக்கப்படும் என தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.



*புனர்நிர்மானம் செய்யப்பட்டுள்ள யாழ் நூலகம்*

தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவர் ஆனந்த சங்கரியும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

---

இச்செய்தி மடல் #13/07, கோல்ட்ஹில் பிளாசா, 51, நியுட்டன் ரோடு, சிங்கப்பூர் - 308900வில் இயங்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் உயர் ஸ்தானிகராலயத்தால் வெளியிடப்பட்டது.
தொலைபேசி: 62544595/6/7 தொலைபிரதி: 62507201 மின்அஞ்சல்: slhcs@lanka.com.sg இணையப்பக்கம்: http://www.lanka.com.sg
வேலை நேரம் 9.00am – 1.00pm 2.00pm – 5.15pm (திங்கள் முதல் வெள்ளி வரை)